UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தமிழ் இலக்கியங்களில் நீர் மேலாண்மைச் சிந்தனைகள்

**ஆ. இராஜ்குமார்**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி
சென்னை-30

**ஆய்வுச் சுருக்கம்**

நீர் அனைத்திற்கும் முதன்மையானது, நீரியலில் தனித் திறன்களைத் தம் பண்புகளாகக் கொண்டு தமிழர்கள் வாழ்ந்து உள்ளனர். நீரும் உயிரும் ஒன்றுதான் என்று புலவர்கள் போற்றி உள்ளதை எடுத்துரைத்தல். நீர் இன்றி கடவுளையும் வணங்குதல் அரிது என்பதைப் புலப்படுத்துதல். தொன்மைக் காலம் தொட்டு அண்மைக் காலம் வரை நீரியலில் தமிழ்ப் புலவர்கள் ஒரே நேர்க்கோட்டில் இருந்ததை எடுத்தியம்புதல் உள்ளிட்ட செய்திகள் இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளீடாகும்.

**முன்னுரை**

இலக்கியங்கள் வாழ்வியலின் கூறுகளைப் பகுத்து ஆயும் களமாகும். வாழ்வியலும் இலக்கியமும் தம்முள் இரண்டறக் கலந்தவை. மனிதன் தோற்றம் என்பது உயிரியலில் முதன்மைப் பெற்றவையாகும். மனதனே பிற உயிர்களிடத்தில் இருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டிக்கொள்ள முயற்சித்தான். அம்முயற்சியைப் பரிணாமம் எனத் துணிவர் அறிஞர்கள். இப்பரிணாமத்திற்கு முதன்மைக் காரணிகளாகத் துணை புரிவன பஞ்ச பூதங்கள். நிலம், நீர், காற்று, ஆகாயம், வாயு என்பவையாகும். இந்த ஐந்து கூறுகளும் மனிதனின் உடலியல் அமைப்பை ஒழுங்குப்படுத்தி வாழ்வதற்குத் துணைபுரிகின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்று குறைந்தாலும் அல்லது கூடினாலும் மனிதன் உயிர் வாழ முடியாது என்பது அறிஞர்களின் கருத்தாகும். இவர்களின் கருத்தை மறுக்க இயலாது. இக்கூறுகளைத் தொன்மைக் காலம் தொட்டே மனிதன் ஆளுமைச் செய்வதில் முயற்சி செய்து இன்று வரை ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்புகளை காண்கிறான். ஐந்து வாழ்வியல் காரணிகளாகவே நிலம், நீர், காற்று, வாயு, ஆகாயம், இவற்றைக் கருதுவது மிகப் பொருத்தமானதாகும். இவற்றில் நீரின் குண இயல்புகளை இலக்கியங்கள் எவ்வாறு எடுத்துரைக்கின்றன என்பது இக்கட்டுரையின் பொருண்மையாகும்.

**தொல்காப்பியம் உணர்த்தும் நீர்**

“தமிழ் இலக்கியக் கொள்கைகளிலும் மொழி நடைமுறை பற்றிய விதிகளிலும் ஆதாரப்பூர்வமான நிபுணராகவும், இலக்கிய வடிவங்களைப் போதிக்கும் மூலகர்த்தாவாகவும் தொல்காப்பியர் கருதப்படுகிறார்”[1] என கார்த்திகேசு சிவத்தம்பி குறிப்பிடுகிறார். இவரின் கருத்து வழி தொல்காப்பியம் தமிழ்ச் சமுதாயத்தின் ஆவண நூல் எனக் கருதலாம். அவரின் கருத்துகள் சமுதாயத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறது. தொல்காப்பியரின்

கருத்துகளைப் பல்வேறு கோணங்களில் உரையாசிரியர்கள் கற்று வெளிப்படுத்தி உள்ள பாங்கு என்றும் நிலைத்த பொருளுடையதாகும்.

**"நிலம் தீ நீர்வளி விசும்பொ டைந்துங்**

**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"[2]**

என்பது தொல்காப்பியம்.

"நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என ஒன்று ஒன்றனுள் அடங்கும் முறையால் கூறுதல் செய்யாது மயங்கக் கூறியது என்னையெனின் அவை கலக்குங்கால் ஒரே பொருளின் கண்ணும் அம்முறையானே நிற்கும் சொல் என்று கருதினும் கருதற்க, மயங்கி நிற்கும் என்றற்கு அவ்வாறு கூறினான்"[3] எனப் பேராசிரியர் உரையை எடுத்து உரைப்பார் அறிஞர்.

**"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**

**ஊனாகி உயிராகி உண்மையுமாய்"[4]**

என்பது திருவாசகம்.

"விண்ணாகிய வானம், மண்ணாகிய பூதம், காற்று ஒளியை உடைய நெருப்பு, உடம்பு, உடம்பிலுள்ள உயிர் முதலிய எல்லா வற்றோடுங் கலந்து அவையே யாகியும்"[5] என உரை வகுப்பர் சா. சுப்பிரமணிய பிள்ளை. நீர் ஏனைய நிலம், நெருப்பு, வளி, ஆகாயம் இவற்றில் கலந்து உள்ளது என்பதை எடுத்துரைக்கின்றனர் அறிஞர்கள். நீரே எல்லாவற்றுக்கும் முதன்மையானது என்பதை உணர்ந்து கொள்ள இயலுகிறது. நீர் இன்றி உலகில் எப்பொருளும் செயல்பட முடியாது என்பது தெளிவாகிறது.

**வள்ளுவர் உணர்த்தும் நீர் கோட்பாடுகள்**

வள்ளுவம் அற இலக்கியங்களுள் முதன்மை யானது என்பதை அறிஞர் உலகமும், சான்றோர் உலகமும் பொதுவியல் உலகமும் ஒப்புக் கொண்டவையாகும். இவற்றில் மறு சிந்தனைக்கு வாய்ப்பு இல்லை; ஏனெனின் குறுகத் தரித்த குறள்' என ஔவையார் உணர்த்தும் நிலையில் வள்ளுவத்தின் மாண்பினை அறிந்து கொள்ளலாம். அறத்துப் பாலில் பொது இயலில் இரண்டாவது அதிகாரமாக 'வான் சிறப்பு' அமையப் பெற்றுள்ளது. இதன்வழி கடவுளுக்கு அடுத்த நிலையில் நீரே போற்றப்படுகிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். கடவுளும் நீரும் ஒன்றே என்பதே அதன் உட்பொருள்.

"அக்கடவுளது துணையான் உலகமும் அதற்கு இறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடப்பதற்கு ஏதுவாகிய மழை யானது சிறப்புக் கூறுதல் அதிகார முறைமை யும் இதனானே விளங்கும்"[6] என்பது பரிமேலழகர் உரை. இவ்வுரையின் நெறியில் நீரின் உயர்வினை அறிந்து கொள்ள இயலும்.

வான் சிறப்பின் பத்து குறட்பாக்களும் நீரின் வலிமையை நுண்மாண் நுழைபுலத்துடன் விளக்கிய பாங்கு நினைக்கும் தோறும் நினைக்கும் தோறும் இன்பம் பயப்பதாகும்.

**"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**

**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று"[7]**

என்பது குறள். உலகிற்கு நீரே அமிழ்தமாகும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

**"நெடுங்கடலும் தான்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**

**நான்நல்கா தாகி விடின்"[8]**

என்பார் வள்ளுவர்.

உலகத்தின் புவியியல் அமைப்பில் மூன்று பங்கு கடல் நீரால் சூழப்பட்டுள்ளது என்பதை அறிஞர் உலகம் கண்டு உணர்ந்துள்ளது. அந்நீர் மூந்நீர் என தமிழ் சுட்டும். இந்த மூன்று நீர்களும் வாழ்விற்கு பயன் அளிக்கும். ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர், ஆகிய மூன்றின் கலப்பும் முந்நீர் ஆகி வாழும் மனிதனுக்கு நேரிடையாக பயன்வழங்குவது இல்லை. "முந்நீர் வழக்கம் மகடு உவோடு இல்லை"[9] என்னும் தொல்காப்பியர் கருத்து ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

புவியியல் அறிஞர்கள் கடலுக்கு குறிப்பிட்ட நீர் செல்ல வேண்டும். இல்லையெனின் புவியியல் மாற்றம் நிகழும் என்கின்றனர். வள்ளுவர் 'நெடுங்கடலும் தன் நீர்மைக் குன்றும்' என்று கூறும் கோட்பாடு எத்தகைய நீர் ஆதாரத்தின் வலிமையுடைய பொருண்மை என்பதை உணர்ந்து கொள்வது மிக உயர்ந்ததாகும்.

மேலும் வள்ளுவர் அதிகாரத்தின் இறுதியில்,

**"நீரின்றி அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்**

**வானின்றி அமையாது ஒழுக்கு**”[10]

என்பார்.

“நீர் இன்றி அமையாது உலகு ஆதலின் எத்திறத்தார்க்கும் மழை இன்றி ஒழுக்கம் நிரம்பாது”[11] என்னும் பரிமேலழகரின் உரை கவனத்திற்குரியதாகும்.

**சங்கமும் நீரும்**

சங்க இலக்கியங்கள் தமிழ்மொழியின் பண்பாட்டை, நாகரிகத்தை, வாழ்வியல் நெறிகளைத் தெள்ளிதின் விளக்கும் கருத்துக் கருவூலமாகும். தமிழினத்தின் தொன்மையை அறிந்து கொள்வதற்குச் சங்க காலமும் சங்க நூல்களும் பெரும் துணை புரிகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நிலப்பாகுபாட்டு அடிப்படையில் தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். குறிஞ்சித்திணையில் சிறு நீரோடைகளும் சுனைகளும் முல்லைத் திணையில் காட்டாறும், மருதத்திணையில் ஆற்று நீர், மனைக் கிணறு, பொய்கையும், நெய்தல் திணையில் மணற் கிணறு, உவர்நீர் நிறைந்த குட்டையும், பாலைத் திணையில் மணற்கிணறு, உவர்நீர் நிறைந்த குட்டை, கிணறும் சுனையும், ஆகியனவற்றை நீர் ஆதாரங்களாகக் கொண்டு வாழ்ந்தனர். இவற்றில் எல்லாத் திணைகளிலும் நீரின் வடிவம் திணை ஒழுக்கத்திற்குத் தக்கவாறும், சூழ்நிலைக்குத் தக்கவாறும் அமையப் பெற்றுள்ளது உணரத் தகுந்ததாகும்.

தமிழரின் வாழ்வியல் நெறியில் பெரும் பங்காற்றும் புறநானூறு பொருநை, கங்கை, காவிரி, குமரி, பஃறுளி, பெண்ணை வையை ஆகிய ஆறுகளை முதன்மைப் பொருளாக கொண்டுவிளக்குவது எண்ணுதற்குரியதாகும்.

கோவூர்கிழார் என்னும் புலவர் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி குறித்து, வஞ்சித் திணையில் புறநானூறு 42ஆம் பாடலைப் பாடி உள்ளார். “காரியாற்றுத் துஞ்சிய என்பதற்குக் காரியா என்னுமிடத்தில் இறந்த என்பது பொருள்”[12] எனப் பொருள் கூறுவார்.

நீர் நிலைகளை ஒட்டியே மனிதர்கள் குடியேறி அதன் அருகிலேயே வாழ்விடத்தை அமைத்துக் கொண்டதையும் அறியலாம். மேலும்; இன்றளவில் இறந்தவர்களின் இறுதிச் சடங்கு நீர் நிலைகளின் கரைகளில் நிகழ்வது எண்ணுதற்குரியதாகும்.

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் குமணன் குறித்துப் பாடாண் திணையில் பாடி உள்ளார்.

“கங்கைக் கரையொரு மலிநீர் நிறைந்து தோன்றியாங்கு”[13] எனப் பாடி உள்ளார்.

மழை வறண்ட காலத்திலும் கங்கையிலே நீர் நிறைந்து உயிர்கட்கு உதவும். அதுபோல, எங்கட்குத் தலையாக உதவிக் காப்பவள் நீ என்கிறார். நீரும், மன்னனும் ஒன்றே என்பது புலனாகிறது. நீர் உயிர் வாழ்வதற்கு முதன்மையானது என்பதை அறிந்து கொள்ளலாம்.

**திருமுறைகளும் நீரும்**

பன்னிரு திருமுறைகளும் பண்பில் உயர்ந்தவை. இறைவன் சிவனடியார்கள் உருவத்தில் தோன்றி திருமுறைகளைப் படைத்தார் என்பது சிவனடியார்களின் உட் கிடக்கை. சிவனும் சைவமும் திருமுறை களாகத் திகழ்கின்றன. சிவனின் எல்லாச் சிறப்புகளும் பரந்து இருப்பதை காண முடிகின்றது. தமிழகம் முழுவதும் உள்ள சிவத்தலங்கள் திருமுறைகளால் உயர்வு பெற்றதாக அடியார்கள் கருதுவார்கள். தொண்டு மார்க்கத்தில் இறைவனை அடையப் பெற்றவர் திருநாவுக்கரசர். இவ்வடியவர் பாடிய தேவாரப் பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாகப் போற்றப்படுகின்றன. நின்ற திருத்தாண்டகம் (உருத்திர தாண்டகம்) என்னும் பதிகத்தில் சிவன் எல்லாப் பொருளுக்கும் மூலமாகி அவனே அனைத்தையும் இயங்குகிறார் எனப் பாடுகிறார்.

**“இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி”**[14]

எனவும்

**“காவிரியாய்க் காலாறாய்க் கழியு மாகிப்”**[15]

எனவும்

**“நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி”**[16]

எனவும்

**“நீராகிநீள் அகலம் தானேயாகி”**[17]

என நீரின் தன்மையை பதிகம் முழுமைக்கும் விரிந்து ஓதியப் பாங்கு எண்ணத்தகுந்த தாகும். நீரே முதலாய் இருப்பதை உணர்த்தவே இவ்வாறு பாடினார் போலும்.

**பாரதியும் நீரும்**

பாரதி யுகக் கவிஞன். தீர்க்கதரிசி, அவன் எண்ணிய எத்தனையோ கருத்துகள் இன்று வடிவம் பெற்றுள்ளன. பாரதிக்குப் பின்பு தோன்றிய எல்லாக் கவிஞர்களும் பாரதியை கவிக் குருவாகக் கருதுகின்றனர். இப்பேறு பாரதியின் கவிதையால் கிடைக்கப் பெற்றவை. கவிஞர்கள் உலகில் இவ்வாறான சிறப்பு வள்ளுவர், இளங்கோ கம்பன், பாரதி இவர்களுக்கு உண்டு. இதே நிலையில் பிற்காலத்தில் இந்தத் தகுதி கண்ணதாசனுக் குப் கிடைக்கப் பெற்றது. பாரதியின் பொருண்மை, பாரதம், தமிழ், தமிழ்நாடு, பாரதத் தலைவர்கள், தெய்வம், இயற்கை எனப் பலவிதமான கருத்தியலைக் கொண்டவையாகும்.

தமிழ்நாடு என்னும் தலைப்பில்,

**"காவிரி தென் பெண்ணை பாலாறு-தமிழ்**
**கண்டதோர் வையை பொருனைநதி-யென**
**மேவிய யாறு பலவோடத் திரு**
**மேனி செழித்த தமிழ்நாடு"**[18]

எனப் பாடுகிறார். புறநானூற்றுப் புலவர்கள் பாடிய அதே நதிகளைப் பாரதியும் பாடி இருப்பது சிந்திக்கத்தக்கதாகும்.

### முடிவுரை

தமிழ் இலக்கியங்கள் நீரினை முதன்மை யாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. பஞ்ச பூதங்களில் நீரே அனைத்திற்கும் தேவையாக உள்ளதை உணரலாம். இறைவனும் நீரும் ஒன்றே என்பது தமிழ்ப் படைப்பாளர்களின் கருத்தாகும். நீரினைப் பன்முறையில் போற்றிப் பாடி உள்ளனர் கவிஞர்கள். இவர்களின் மூல நோக்கம் நீரினை நன்கு கையாண்டு; வாழ்வினைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

### சான்றெண் விளக்கம்

1. கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமுதாயம், ப. 45.
2. தொல்காப்பியம், மரபியல், நூ. 1589.
3. தொல்காப்பியம், பொருள், இளம்பூரணர் உரை, பகுதி-3 ப.209.
4. சா. சுப்பிரமணியபிள்ளை, திருவாசகம் உரை விளக்கம் ப.115.
5. மேலது, ப.115.
6. திருக்குறள், பரிமேலழகர் உரை, ப.13.
7. திருக்குறள் எண்.11.
8. திருக்குறள் எண்.17.
9. தொல்காப்பியம் அகம், நூற்பா 980.
10. திருக்குறள் எண். 20.
11. பரிமேலழகர் உரை, ப.17.
12. உ.வே. சாமிநாதையர், புறநானூறு மூலமும், பழைய உரையும்.
13. புறநானூறு, பா.எண்.160.
14. திருநாவுக்கரசர் தேவாரம் ஆறாம் திருமுறை, பா. 94, 1-2, அடி. 2.
15. மேலது, பா 94 3-2 அடி-2.
16. மேலது, பா-94, 4-5 அடி 5.
17. மேலது, பா. 94. 9, அடி-1.
18. பாரதியார் கவிதைகள் தமிழ்நாடு பா-3.

### பயன்பட்ட நூல்கள்


1. கார்த்திகே சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 050.
2. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-600 108.
3. தொல்காப்பியம், பொருளதிகாரம் பகுதி-3, இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை-18.
4. கா. சுப்பிரமணிய பிள்ளை. திருவாசகம் உரை விளக்கம், தமிழ் நிலையம், தியாகராயர் நகர், சென்னை-17.
5. திருக்குறள் பரிமேலழகர் உரை, உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை-600 001.
6. டாக்டர் உ.வே. சாமிநாதையர், புறநானூறு மூலமும் தமிழ் உரையும், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை-41.
7. திருநாவுக்கரசர் தேவாரம், ஆறாம் திருமுறை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
8. பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-600 108.